மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், இங்கே மதுரை கூட்டுறவு நூற்பாலை பற்றி கேட்டிருந்தார்கள். மதுரை கூட்டுறவு நூற்பாலையினுடைய இடம் முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களுடைய புதல்வர் அழகிரியினால் ஆக்கிரமிக்கப்பட்டு, 12 ஏக்கர் நிலம் குறைந்த விலைக்கு அங்கே டாமினுக்கு விற்கப்பட்டது.*

இங்கே மூடிக்கிடக்கின்ற 13 கூட்டுறவு நூற்பாலைகளும் நவீனமயமாக்கப்பட்டு, புதிய இயந்திரங்கள் வாங்கப்பட்டு, வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். தொடர்ந்து வேலைவாய்ப்புகள் கொடுத்து கொண்டிருக்கின்ற ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரிய ஆலோசனையைப் பெற்று, 104 கோடி நிதியைப் பெற்று, சிறப்பான முறையில் ஓடுவதற்குத் தயார் நிலையில் திட்டம் இருக்கின்றது என்பதையும் தெரிவித்து, மீதமிருக்கின்ற கூட்டுறவு நூற்பாலைகளை இயக்கி தமிழகத்தில் உள்ள அனைத்து நெசவாளப் பெருமக்களுக்கும் வேலைவாய்ப்புகள் கொடுப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

157—

தொழிலாளர் நல நீதிமன்றம்

***811—திரு. சு. ரவி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்தில் தொழிலாளர் நல நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களை ஆட்சி எல்லைகளாக உள்ளடக்கிய வேலூரில், ஏற்கெனவே தொழிலாளர் நீதிமன்றம் இயங்கி வந்தது. இம்மாவட்டங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் வேலூரில், கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் ஒன்று அரசால் உருவாக்கப்பட்டு, தற்போது வேலூரில் இரண்டு தொழிலாளர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. வேலூரில் உள்ள நீதிமன்றங்களில் சராசரியாக ஒவ்வொரு நீதிமன்றத்திலும் மாதத்திற்கு மொத்தம் 400 வழக்குகள் பதிவாகின்றன. 1947 ஆம் வருட தொழிற்தகராறுகள் சட்டப் பிரிவு 2(ஏ) மற்றும் 2(கே)—இன்கீழ் அரக்கோணம் தொகுதியில் மிகவும் குறைந்த அளவில் தொழிற்தாவாக்கள் தொழிலாளர் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு விடப்பட்டு வருகின்றன. எனவே, வேலூர் மாவட்டத்திலுள்ள அரக்கோணம் தொகுதிக்கெனப் பிரத்தியேகமாக தொழிலாளர் நீதிமன்றம் அமைப்பது குறித்து அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்குக் காலதாமதம் இல்லாமல் நீதி கிடைத்திட வேண்டுமென 49 விரைவு நீதிமன்றங்களும், தென் மாவட்ட மக்களுக்கு உயர் நீதிமன்றக் கிளையைப் பெற்றுத் தந்து, நீதிமன்ற வரலாற்றிலே நீங்காத இடம் பெற்றிருக்கின்ற நீதி தேவதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதியில் எம்.ஆர்.எப்., அல்ட்ராடெக், ராம்கோ போன்ற 10—க்கும் மேற்பட்ட பெரிய தனியார் தொழிற்சாலைகளும்,

ஆசிய கண்டத்திலேயே மிகப் பெரிய கப்பற்படைத் தளம் என்று சொல்லக்கூடிய ஐ.என்.எஸ். ராஜாளி, இரயில்வே தொழிற்சாலை, மத்திய பாதுகாப்புப் படை போன்ற பெரிய மத்திய, மாநில நிறுவனங்களில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும், ஒப்பந்தத் தொழிலாளர்களும் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் தொழிற்தகராறு குறித்து தொழிலாளர் நல நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேலூர் மாநகரத்திற்குச் செல்ல வேண்டும். அந்த நீதிமன்றம் வெகு தூரம் உள்ளதால் பாதிக்கப்பட்ட ஏழையெளிய தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாமல், வழக்குப் பதிவு செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். வேலூர் மாவட்டத்திலே குறிப்பாக எனது அரக்கோணம் தொகுதியில்தான் அதிகமான தனியார் தொழிற்சாலைகளும், அதிகமான தொழிலாளர்களும் உள்ளார்கள். எனவே, ஏழைத் தொழிலாளர்கள் வாழ்வின் ஒளிவிளக்காகத் திகழ்ந்துவரும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், அரக்கோணத்திலே ஒரு தொழிலாளர் நல நீதிமன்றத்தை அமைத்துத் தர வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரக்கோணத்தில் தொழிலாளர் அமர்வு நீதிமன்றம் ஒன்று தனியாக அமைக்க செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் கோரிக்கையின் அடிப்படையிலும், தொழிற்தாவாக்களின் எண்ணிக்கை அடிப்படையிலும், சம்பந்தப்பட்ட மாவட்டத் தொழிலாளர் நீதிமன்றம் முகாமிட்டு தீர்வு செய்ய வழிவகை உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 158, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.